Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

...ஸ்தாபனம் (1889) ஆவணி 25உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருது ஞூ ஐப்பசிமீ கஉ வெள்ளிக்கிழமை (18 October. 1963) [இல-உக

# சபையின் தலைவராகப் பணி ஆற்றிய இராமநாதவள்ளல்

## இன்று தொடங்குகிறது இராமநாதன் கல்லூரிப் பொன் விழா

—:0:—

[யாழ் - சைவபரிபாலன சபை, சமயப்பிரசார அமைச்சர், திரு. மு. மயில்வாகனம் அவர்கள்]

ஈழநாட்டில் அன்னியர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் அவர்கள் தங்கள் மதத்தையும் நாகரிகத்தை தையும் பரப்பும் நோக்கமாக நமது நாட்டுமக்கள் பலரை மதம் மாறச் செய்தார்கள். அதனால் சைவ சமயம் குன்றிவரலாயிற்று. நமது நாடு செய்த தவத்தின் பயனாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அவதாரஞ் செய்து சைவ சமயத்தைப் பாதுகாத்தருளினார். அவர் காலத்திலேயே அவரைப்போல சைவ சமயம், கல்வி, அரசியற்றுறைகளிற் றொண்டு புரிதற்கு ஸ்ரீமான் பொன்னம்பலம் இராமநாதவள்ளல் தோன்றினார். அவர் மானிப்பாயிலுள்ள பழைய சைவ வேளாண்குடியில் உதித்தவர். நாவலரைப்போலச் சைவசமயத்துக்கும்பொது நலசேவையிலும் தொண்டு புரிந்தவர். திருமகளும் நாமகளும் ஒருவரிடத்தில் சேர்ந்திருப்பக்காண்பதரிதெனக் கூறுவர். ஆனால் ஸ்ரீமான் இராமநாத வள்ளல இடத்தில் இருவரும் ஒருங்கு விளங்கி அருளுடையவாழ்க்கையைச் சிறக்கச் செய்தனர். அவர் தமிழ், வடமொழி, ஆங்கிலம், ஆகிய மும்மொழிகளையும் கசடறக் கற்றவர். தமது கருத்துக்களை ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகள் மூலம் பிறருக்கு எழுத்து மூலமும் பேச்சு மூலமும் அறியச் செய்வதில் மிகுந்த திறமையுடையவர். உயர்தர வழக்கறிஞராகவும் சட்டசபை அங்கத்தவராகவும் கடமையாற்றியவர். அவர் சிறந்த தத்துவ ஞானியுமாவார். ஸ்ரீலஸ்ரீ அருள்பரராசத் தேசிகரிடத்தில் சைவ சித்தாந்த பாடங் கற்றவர். யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் தலைவராகவும் சிலகாலம் தொண்டாற்றியவர்.

அவர் மறைந்தாலும் அவருடைய புகழுடம்பாக விளங்குவன கொழும்பு பொன்னம்பலவாணேசுவரர் சிவாலயம், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரி என்பன.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, 1913-ம் ஆண்டு தாபிதமானது. ஒரு சமயத்தையோ மொழியையோ நாகரிகத்தை யோ பாதுகாக்கும் முக்கிய கடமை பெண் மக்களில் தான் தங்கியிருக்கின்றது. அதனை உணர்ந்து பெண் பிள்ளைகளுக்குச் சைவாசாரப்படி கல்வியூட்டுவ

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## நற் சிந்தனை

—:—

நீறணிந்த திருமேனி
பொலிந்து தோன்றும்
நெற்றிமேற் கண்தோன்றும்
மதியந் தோன்றும்
ஆறணிந்த சடைதோன்றும்
அம்மை தோன்றும்
அரைக்கசைத்த புலியாடை
அசைந்து தோன்றும்
ஏறமர்ந்த எழில்தோன்றும்
இசையுந் தோன்றும்
எடுத்ததிருப் பதந்தோன்றும்
மழுமான் தோன்றும்
பேறளிக்குந் திருக்கரத்தின்
பெருமை தோன்றும்
பிரியாமல் என்னையாள்
பெருமானார்க்கே. 1.

எல்லா வுலகமு மானாய் நீயே ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே. ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே புகழ்ச் சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே திருவையா றகலாத செம்பொற் சோதி

—

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச்சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

## சுவை கொள் கரும்பே!

—

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்க வென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
தண்டா னுறங்க வொழித்தான் பித்தாக வுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலா வல்லியே.

## பாலர் பாடசாலை கட்டிடத் திறப்புவிழா

யாழ். நாயன்மார்கட்டு பாலர்பராமரிப்புக் கழகம் நடாத்தும் பாலர் பாடசாலையின் புதிய கட்டிடம் எதிர்வரும் 20-10-63 ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் கோப்பாய்க் கிராமச் சங்கஉறுப்பினர் திரு இ. சரவணமுத்து அவர்களால் குத்துவிளக்கேற்றித் திறந்து வைக்கப்பட இருக்கிறது.

## மங்கையர்வாழ — மாமறைவாழச் சைவ மரபினிலே தாபிக்கப்பெற்ற இராமநாதன்கல்லூரி

—

(தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் இராமநாதன் கல்லூரி நிறுவப்பெற்ற ஞான்று வாழ்த்திப் பாடிய பாக்கள் இவை இதுவரை அச்சுக்கேருதவை).

வாழியுயர் சைவநெறி வாழிதிரு நீறுகண்டி
வாழிமனு நீதிபுரி மன்னவன்கோல் — வாழியரோ
வாடாத சீர்த்தி மலிராம நாததுரை
நீடூழி காலம் நிறைந்து.

முருகுவிரி தவளநறுங் கமலமுறு மோதிமத்தைப்
பருகுகலை முழுதுமளி மறைமிழற்று பசுங்கிளியை
உருகியுளம் பரவசமா யுறவிசைசொல் பூவைதனை
மருவுறுசெங் தாமரைத்தாள் வணங்கிமிக வாழ்ந்தனமே.

சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ்
சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் மாறனும்
சங்கப் புலவருந் தழைத்தினி திருந்த
மங்கலப் பாண்டி வளநா டொருவி
வென்றியிற் படர்ந்த மேதகு வேந்தொடு
நன்றியிற் படர்ந்து நாள்பல வுலப்பினுங்
கலங்காச் சீர்த்தி யிலங்கை மூதூர்க்
கன்னிதன் சிரமென மன்னு யாழ்ப்பாண
வளநக ரொருசா ரழகொடு செறியும்
தேம்படு கஞ்சத் தீம்புனல் வாவியும்
செந்நெற் கழனியுங் கன்னற் படைப்பையும்
வருக்கையுங் கதலியுந் திருக்கிளர் பூகமும்
தன்னகந் தழீஇ நன்னலங் குழீஇய
தேனியம் புறுமலர்த் திருக்கிளர் சோலை
மானியம் பதியினில் வாழ்வுகந் தருளிய
முழங்கிடு பெருஞ்சீர்ப் பழங்குடி யதனில்
எண்ணுன் கறமும் மண்ணக நிறீஇய
கண்ணிய மிகுந்த புண்ணிய புருடன்
பொன்னம் பலமென மன்னிய நாமத்
தரசறி பெருமான் திருமர பென்னும்
எண்டிசை யொலிக்கும் தெண்டிரைப் புணரியில்
கலைநிறை மதியென விலகுபு வெழுந்த
பொன்னம் பலமெனு நன்னயக் குரிசில்
முன்னு ளியற்றும் பின்னமில் தவத்தால்
முடியுடை மன்னர் மூவர்கா ணென்று

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

தேவி தோத்திரம்

## செந்தமிழ்ச் சுந்தரி

★

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம் : மோகமை :: தாளம் : ஏகம்

ஓம்சத்தி ஓம் ஓம்சத்தி ஓம்
ஓம்சத்தி ஓம் ஓம்சத்தி ஓம் (ஓம்)

(1) சாம்ப சங்கரி சந்திர சேகரி
தாண்டவ நாயகி சகல தயாபரி
பாம்பணி ஆரணி பரிமள சுந்தரி
பார்வதி ஜனனி பரமசு தந்தரி (ஓம்)

(2) அங்கயற் கண்ணி ஆதிச ரோஜனி
ஆனந்த பைரவி அன்ன பூரணி
பங்கயச் செல்வி பகவதி தேவி
பவானி விமலினி பாக்யசோ ரூபி (ஓம்)

(3) அரஹரப் பிரியை ஆதி மனோன்மணி
அம்பிகை கௌரி அகில பூரணி
திரிபுர நயனி ஸ்ரீகரு ணாகரி
செந்தமி ழழகி தேவம னோகரி (ஓம்)

(4) வீர நர்த்தனி வேதம கேஸ்வரி
மீன லோசனி விமலி சடேஸ்வரி
சீரி லட்சுமி சிம்ம வாகனி
சீவ ரட்சகி ஸ்ரீநா ராயணி (ஓம்)

(5) சிவசத்தி நவசத்தி ஜெயசோ தீஸ்வரி
சியாமணி ரஞ்சனி சிதம்ப ரேஸ்வரி
சிவைபு ராதனி செல்வி சரஸ்வதி
ஜெகதாம் பிகையே திருவருள் புரிவாய். (ஓம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சோபகிருது ௵ ஐப்பசி மீ கஉ வெள்ளிக்கிழமை

## இராமநாத இலட்சியம்

தேச சேவையின் சிறந்த சின்னமாக ஈழத்திலே இலங்கியதொண்டர் இராமநாத வள்ளல் என்பது யாவருமறிந்ததே. இதற்குப் பல சான்றுகள் உள. அவற்றுள் ஒன்று வானளாவ ஓங்கி மங்கையரின் மதி வளர்ச்சிக் கலை நிலையமாகத் துலங்கும் இராமநாதன் கல்லூரியாகும். இற்றைக்கு ஐம்பதாண்டுகளுக்கு முன் இந் நாட்டு மக்களினது தவப் பயனுக அவர்களுக்கெல்லாம் ஏகப் பிரதிநிதியாக விளங்கிய திரு. பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் எழிலுற இக் கல்விக் கழகத்தை நிறுவி தமிழ்ப் பெண்மணிகள் சால்புடன் வாழ்க்கை நடத்தி வரத் தரும கைங்கரியஞ் செய்த பேருபகாரத்தை நன்றியுடன் நினைவு கூரும் இவ் வாரத்தில் தமிழகத்தின் தவப் புதல்வனைப்பற்றியே முதற்கண் எண்ணம் எழுகின்றது.

அறஞ்செய் என்று மட்டும் சொல்லி முடிக்காது அறஞ் செய விரும்பு என ஆன்ரோர் அமுதமொழியிருப்பதை ஈண்டு நோக்குதல் பொருத்தமாகும். விரும்பி அறஞ்செய்தார் வித்தகர் இராமநாத வள்ளல் என்பதை ஈழத்தின் சிரமென இயங்கும் யாழ்ப்பாண நாட்டின் இரு நயனங்களாக அமைந்த கல்விக் கழகங்கள் காட்டுகின்றன; அவற்றை அமைத்த பெரியாரின் சிந்தனையும் செய்கையும் அறத்தின் அடிப்படையில் இயைந்தன என்பது தமிழகத்துக்கே பெருமையான தொன்று.

கல்விக்கழக மொன்றை நிறுவுவதற்கு அங்நிலையம் எந்நோக்கத்துக்கமைய வேண்டும், எத்தகைய சால்புவழிச் செயலாற்ற வேண்டும் என்பனவாம் பலவேறு யோசனைகளின் பண்பு அத்தியாவசியகம். இராமநாத வள்ளல் சிறந்த கல்விப்பேறும், பல நூற்றுணிபும், பரந்த நோக்கும், எல்லாவற்றிலும் மேலாகச் சைவ நெறிச் செம்மையும் உடையராகையால் அன்னர் உள்ளத்தில் எழுந்த கல்விக் கழக எணணம் இவையெல்லாம விளங்கப் பணியாற்றும் கலை நிலையத்தை உருவாக்க உதவியாயிருந்தது

காலையிலும் மாலையிலும் கண்ணுதற்கடவுளைப் பண்ணுடன் வாழ்த்தும் திருமுறைகளை ஓதும் பயிற்சி முதல் இடம்பெறவும், பரவவினிய திருநீறும், செம்மை திகழ்ந்தும் திலகமும் இன்றியமையாச் சாதனங்களாகவும், சைவச்சால்பும், தமிழ்மரபும் தழுவிய கல்வி இலட்சியமாகவும், இராமநாதன் கல்லூரியில் அமைந்தன என்றால், இராமநாத வள்ளலின் எண்ணத்தின் பண்பு எத்தகையதென்பது புலனுகும்.

நாற்குணமும நாற்படையாய் ஐமபுலனும் நல்ல மைச்சாய்ப் பெண்மைப் பேறுடையதாகக் கல்விப் பயிற்சியும் சைவப்பண்புப் பழக்கமும ஒருங்கமைந்த இராமநாதன் கல்லூரியின் எழிலுக்கு அதை நிறுவிய வள்ளல் காட்டிய வழியே அதிபர்களும, ஆசிரியர்களும் நன்குழைத்ததன் பயனை இன்று காண்கின்ரோம். இப்பொழுது இக் கல்லூரி அரசினா ஆட்சியிலுள்ளதாயினும் தலைமை தாங்கும் ஆசிரியை இராமநாத இலட்சியத்தை இம்மியளவும் கைவிடாது திறம் பெற நடத்தி வருவது பாராட்டுக்குரியது.

இராமநாத வள்ளல் எங்கள் சைவ பரிபாலன சபையின் தலைவராக ஒரு காலத்தில் விளங்கினர். அப்பெரியாரே சைவ வித்தியா விருத்திச் சங்கத்தையும் அமைத்தவர். இத்தகைய உத்தமரின் பரோபகாரத் தொண்டின் தத்துவம் தமிழகத்துக்கு எடுத்துக் காட்டாக என்றும் இலங்கும் என்பது எங்கள் எண்ணம்.

# கட்டவிழ்க்கும் 'கலைகள்' மொட்டவிழ்க!



வீரமும் உடல் நலமும் நல்கும் துர்க்கா தேவிக்கு முதல் மூன்று நாட்களும், பொலிவு தரும் பொருள்வழங்கும் திருமகளாம் இலக்குமிக்கு அடுத்த மூன்று நாட்களும், சிந்தையைப் பண்படுத்திச் சீர்படுத்தும் கல்வியும், இதயத்தில் மென்மை புகுத்திக் கனிவித்து நுண்ணுணர்வு பூக்க வைக்கும் இன்னறுங் கலைகளும் வழங்கி, வளர்க்கும் சகல கலா வல்லியாம் சரஸ்வதிக்கு இறுதிமூன்று நாட்களுமாக ஒன்பது நாட்களும் நோன்பு நோற்றுக் கொண்டாடப் படுகின்றன.

'உடம்பை வளர்த்தேன் உயிரை வளர்த்தேன்' என்ற திருமூலர் வாக்கிற்கிணங்க ஆன்மநலம் நோக்காக உடலைப் பேணிச் சுகந்தேடும் ஆன்ரோர்களும் விலைஞர்களும் கலைஞர்களும் விரும்பி வணங்கி விரதங் கிடந்து வாழ்வில்—தொழிலில் – கலையில புதிய ஊக்கமும் மறுமலர்ச்சியும் வேண்டும் பெருமைவாய்ந்த இந்த நோன்பினை சைவ மக்கள் அனைவரும் மேற்கொள்ள வேண்டும். அவர்கள் யாவரும் இந்த ஒன்பது நாட்களும் தெய்வ சிந்தையில் திளைத்து எதிர் காலத்தில் தத்தமக்குரிய கடமைகளையெல்லாம் சரியாக எண்ணிப் பார்த்து, தக்க வழிகளைத் தாமாக வகுத்துகொள்ள வேண்டும்.

மனிதப் பண்புகளுள் மாணிக்கப் பண்புகளாக மதிக்கப்படும் தமிழ்க்குலத் தனிப் பண்புகள், தமிழர்

"வில்லூரன்"

பழம் பெருமை, அவர்தம் உரிமை இவற்றையெல்லாம் பேண மன உறுதியும் உடல் உறுதியும் இன்றியமையாது வேண்டப்படுகின்றன. குறைவற்ற இச் செல்வத்தை— நிறைவிற்கு அடியெடுத்துக் கொடுக்கும் இச் செல்வத்தை அள்ளி வழங்குமாறு துர்க்கையைத் தொழுவோமாக.

நாடாவளத்தது நாடென்றும் போல நாடா வளத்தது நம்மினம் என்று மார்த் தட்டித் தோள் கொட்டும் பொருள் வளச் செழிப்பு நம் தமிழர் பகுதிகளில் ஊக்கம் பெற வேண்டும். கை கட்டி கை நீட்டிக் கால் பிடித்து அயலினத்திற்கு அடிமைச் சேவகம் புரிய மாட்டோம் என்ற நிலைக்கு முதுகெலும்பு பொருளாதார பலமேயாகும். அவ்வலிமையை அருளிச் செய்யுமாறு செந்தாமரைச் செல்வியை வணங்குவோமாக.

காலத்தின் தேவையையும் ஓரளவில் நினைந்தோ நினையாமலோ பூர்த்தியாக்கிக்கொண்டே கலைகள் வளர்கின்றன. எனவே ஈழத்தில் வளர்ந்து வருந் தமிழ்க் கலைகளும்—அவற்றின் வளர்ச்சியின் போக்கும் இதற்கு விதி விலக்கல்ல. இந்தப் போக்கைப் பிற்போக்கென்றும் வகுப்பு வாதம் என்றும், இன வெறியென்றும் பெயரிட்டு அழைப்பவர்கள் கலைஞர்களைப் பயமுறுத்தலாலும பலாத்காரத்தாலும் வழி திருப்பிக் கலைச் சேவை செய்யலாம் என்று நமபும் பேதமை மிக்கவர்கள்—இவர்களால் கலை வளராது. கலை வளர்ச்சிக்கு ஏற்படும் இத்தகைய முட்டுக் கட்டைகள் நீங்கவேணடும் என்று கலாதேவியை வணங்கித் துதிப்போமாக.

—0—

# சுதேச நலத் தொண்டன்!

தன்றுதை வழிமுன்னோர் தாமுதித்த யாழ்ப்பாணத் தனிநன் னாட்டில்
இன்றோன் றிளமகளிர் கற்றறிவின்மீதூர வியம்புந் தன்பேர்
நின்றோங்கு கழகமுட னிளைஞர்களாங் கிலம்பயில நிமலன் தன்பேர்
முன்றோன்று கலூரியுநன் கமைத்துதவித் தருமத்தின் முதலாய் நின்றோன்.

x x x

ஆங்கிலநாட் டரசிருந் தரசாளும் லண்டனக ரடைந்தி லங்கைத்
தேங்குறுகுஞ் சனங்களுக்குவேண்டுவன பலமுறையுந்தேர்ந்துதாமே
பாங்கிறெடும் புரிதலினுற் சுதேசநலத் தொண்டனெனப் பகர்சீமான் சேர்ப்
பூங்குலவும் பட்டமினி துறும்ராம நாதனெனப் புகல்கோ மானே.

— மகாவித்துவான் சி. கணேசையர்.

# உலக சமாதானத்தை உருவாக்கும் மகா நோன்பு

## கந்தரோடை - சன்மார்க்க தவகூடம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

நல்ல அறிவுள்ள மனித சமுதாயம் நோன்பை முற்றுய்ச் சிந்திக்க வேண்டும். அதம நோன்பின் கருத்து வேறு; மத்திம நோன்பின் கருத்து வேறு, உத்தம நோன்பின் கருத்து வேறு. உத்தம நோன்பின் கருத்து:- மிகுந்த சிறப்பும் மிகுந்த கருணையும் நிறைந்துள்ளது; மேலும் இறைவனையே முற்றுக நம்பி நிற்கும் மிக உயர்ந்த நிலை; புண்ணிய அறிகுறி. எனவே, "மேன்மைகொள் சைவநீதி" உத்தமநோன்பைப் போற்றுகிறது; உலக சமாதானத்தைப் போற்றுகிறது; புண்ணிய அறிகுறியையும் புண்ணியப் பசளையையும் போற்றுகிறது; சன்மார்க்க வாழ்வையும் போற்றுகிறது, "புண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்" என்ற அறிகுறியையும் உயர் ஒழுக்கத்தையும் போற்றுகிறது.

இம்முறைகளினுல், அகத்தின் அழகு தோன்றும்; உலகின் அழகு தோன்ற வுதவியாகும், இந்தவுதவியால், உலக சமாதானமும் நல்லெண்ணமும் பெலமாக வோங்கி வளரும். இவைகள் தான் புண்ணியப் பசளையின் பெரும் அர்த்தம்; உத்தம நோன்பின் அர்த்தம்; உத்தம சமயத்தின் மேலான வழிபாட்டின் அர்த்தம்; உத்தம கலையறிவின் அர்த்தம்; உத்தம் சீர்திருத்த மேம்பாட்டின் நாகரிக வளர்வின் அர்த்தம். பஞ்சசீல ஒழுக்கமும், சத்திய நெறியுமறறவர், இவ்வகை நோன்பின் உயர் நிலையை எட்டியும் பார்க்க இயலாதவர் நிற்க, என்றுமுள்ள மகா முருகவேள், பிரணவப் பொருளுரைத்த மகா கருணை வள்ளல் தலைமையில், மேற்படி சன்மார்க்க தவகூடம் கொண்டாடும் உயர்ந்த வைபவ முறையையும், முன்னமே இந்துசாதன வெளியீடு மூலம் (11 - 10 - 63) உலகச் சைவப் பெரியார்கள் அறிய அறிவித்துள்ளது. இன்னும், அதன் விசேட அறிகுறிகளை நாமெல்லோரும் அறிதல் மிகவும் அவசியம். அதில் பஞ்சம், பசி, நோய், துன்பம, அச்சம், பாதகம், பாவம், பழி, துஷ்டநீசம், அரச நெருக்கடி, உலக நெருக்கடி, கடவுள் இல்லையென்ற வீண் வாக்குவாத அகம்பாவம் எல்லாம் மாறும். உத்தம நோன்பும் பூசை அபிஷேகமும் நல்ல விருந்தும், புண்ணிய மருந்தாக சஞ்சீவியாக உலக நோய்கள் மாற உதவியாகும்.

சிறந்த காரணம்:- பூரணை நாளும். வெள்ளிக்கிழமை நாளும், ஐப்பசி மாசமுஞ் சேர்ந்து வரும் புண்ணிய நோன்பு நாள் மிகவரிது! அதிலும், "பரணி கார்த்திகை" யாகிய இரு நட்சத்திர நாட்களும் அடுத்தடுத்த நாட்களாகி, ஞாயிறு நாளும் வந்து சேருதல் எப்பொழுதும் மிக வரிது; புண்ணியச் சம்பவச் சரித்திரங்களை விளக்கும் நாட்கள் அடுத்தடுத்து வருகின்றன.

மகாசத்திதாய்மை நோன்பும், பிரணவ விளக்க நோன்பும, மகா முருகவேள் நோன்பும், உலக இன்னல்களை நீக்கும் நோன்பும், இத்தினத்தில் விசேடமாக இடம்பெறுகின்றன. இவ்வகை நோன்பை ஆசாரத்தை நன்றியை நட்பை சமாதானத்தை நற கலையறிவை வளர்க்கும் உயர்ந்தமுறையில் (ரூ. 1000) ஆயிரம் ரூபா பரிசு எப்படி? என்று இங்கே விபரிக்கப் பெறும்.

சங்கம் மருவிய மகா முருகவேள் நினைவும், அருந்தவங் கைக்கொண்ட பெரியோர் நினைவும், அப்பர் அடிகளார் வழிகாட்டிய நினைவும், எத்தனையோ நல்ல புண்ணிய நோன்புகளை எமக்கும் உலகினருக்கும் இயம்புகின்றன; உத்தம உண்மை வழியைக் காட்டித் தருகின்றன. இந்த நாளில் (1-11-63) ல் பலரும் புண்ணியப்பசளையைப் பெற்றுப் புனித உத்தமர் ஆவாராக! ஆண்களும் பெண்களும் அமைதியாக இந்த நோன்பு விழாவில் இடம் பெறுவாராக!!

வித்துவக் கலைஞன்
ஆ.சி. சாந்தகுரு,
கந்தரோடை,
4-10-63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லகீர்த்தனம் — 48.

## முருகனைக் கண்டேனடி

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : பெலகரி :: தாளம் : ஆதி

பல்லவி

குருவடி வாகியீசற் குபதேசம் செய்ததிரு
முருகனைக் கண்டேனடி — சகியே

அநுபல்லவி

திருவளர்ந்திடும் நல்லை திகழ்ந்து அமர்ந்து அருள்
தருவேலவனைச் சிவ குருவான சண்முகனை

சரணம்

பதிபசு பாசமென்னும் பக்குவங்கள் போதிக்கும்
அதிபதியாகி ஈசன் அழகுதோள் மீதிருந்து
கதிதரும் பிரணவப் பொருள்தனை உணர்த்தவே
துதிசெய்து இறையவன் தூக்கி வணங்கிய (குரு)

அணிந்துரை அரங்கம்

# சேத்திரத் திருவெண்பாவும் உரையும்

உரையாசிரியர்
வெளியிட்டோர் :
திரு. வை, கதிர்காமநாதன்

பன்னிரு திருமுறைகளுள்ஒன்ருகிய பதினேராந் திருமுறையுள் நம்பியாண்டார் நம்பி தொகுத்த பாடல்களுள்ஒன்ருன சேத்திரக்கோவை,ஐயடிகள்காடவர்கோன் நாயனுரால் இயற்றப்பட்டது. 24 வெண்பாக்களும் உலக நிலையாமையைக் கூறுகின்றன. இத் திருவெண்பா பாடிய மேற்படி நாயனர் சோழர் குலத்தில் தோன்றிய ஓர் அரசர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வரசர் சுகபோகங்களின் நடுவில் இருந்து கொண்டும் நிலையற்றவை இம்மண்ணுல இன்பங்கள் என்று அவற்றை எல்லாம் வெறுத்துரைக்கின்ற முறை மிக அழகாக இருக்கிறது. இந்நூலிலுள்ள ஒவ்வொரு வெண்பாவும் இளமை மாரு வளங் குலுங்கும் எழிற் கவிதை! இவ்வெண்பாக்கள் கூறவந்த ஒவ்வொரு கருத்தும் புதுமையும் ஆழமும் மிக்க உண்மைத் தத்துவம். புலன் நுகர்ச்சியே பேரின்பம் என்னும் சிற்றின்ப ரசிகர்களைச் சிந்திக்க வைக்கும் சிறப்பு வாய்ந்தபாக்களிலே சில இதோ உதாரணத்திற்கு,

கடுவடுத்த நீர்கொடுவா
காடிதா வென்று
நடுநடுத்து நாவடக்கா
முன்னம் — பொடியடுத்த
பாழ்க்கோட்டஞ் சேராமுன்
பன்மாடத் தென்குடந்தைக்
கீழ்க்கோட்டஞ் செப்பிக்கிட.

x x x

தொட்டுத் தடவித்
துடிப்பொன்றுங் காணுது
பெட்டப் பிணமென்று
பேரிட்டுக் — கட்டி
யெடுங்களத்தா வென்னுமுன்
னேழை மடநெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை.

x x x

காளையர்க ளிளையர்க
ளாகிக் கருமயிரும்
பூளையெனப் பொங்கிப்
பொலிவழிந்து — ஞளையர்க
ளோகாளஞ் செய்யாமு
னெஞ்சமே யுஞ்சேனை
மாகாளங் கைதொழுது
வாழ்த்து.

x x x

கரமூன்றிக் கண்ணிடுங்கிக்
கால்குலைய மற்ருேர்
மரமூன்றி வாய்குதட்டா
முன்னம் — புரமூன்றுந்
தீச்சரத்தாற் செற்ருன்
திருப்பனந்தாட் டாடகைய
வீச்சரத்தான் பாதமே யேத்து.

x x x

நாற்றனைத்தோர் பல்லூழி
நுண்வயிர வெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம்
விழையாதே — கூற்றுதைத்தா
னடரவங்கச்சா வரைக்
கசைத்த வம்மான்றன்
பாடரவங் கேட்ட பகல்.

இந்நூலைவெளியிடத் தேர்ந்தெடுத்த திரு. வை. கதிர்காமநாதன் அவர்களை பாராட்டவேண்டும் இவ் வெண்பாக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திருத்தலத்தைப்போங் வணங்கும் படி ஏவுகின்றது. அந்தச் சேத்திரங்களின்விபரத்தையும் மகிமையையும் ஒவ்வொரு பாட்டின் கீழும் எழுதியிருப்பதுடன் இப் பாடல்களுக்குச் சிறந்த முறையில் பாட்டுக்களில் மின்னும் உணர்ச்சி பிறழா வண்ணம் உரையெழுதியுள்ளமைக்கு திரு கதிர்காமநாதன் அவர்களைப் பாராட்டவேண்டும். வேண்டியஇடங்களில் ஏற்ற மேற்கோள்களும் தரப்பட்டுள்ளன.

தமிழறிஞர் திரு. சு. நடேசபிள்ளை, சைவபரிபாலன சபைத் தலைவர் திரு த. முத்துசாமிப் பிள்ளை, நாவலர் பாடசாலைத் தலைமை ஆசிரியர் வித்துவான் இ. திருநாவுக்கரசு ஆகியோர் பாராட்டுரை வழங்கியுள்ளனர்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய சிறந்த நூல் இது.

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

விலை சதம் 65.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர்
காசிநாதர் சுப்பிரமணியம்
—வழக்காளி.

வழக்கு இல. M,B. 4504

எதிராக

காரைநகர் கிழக்கு
சின்னர் ஆறுமுகம்
— எதிராளி.

(தற்போது மட்டக்களப்பு மறியற்சாலை ஒப்பந்தக்காறனின் கீழ் வேலை செய்பவர்)

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4504-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டு காணி 1963 - ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16-ந் திகதி (16-11-63) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 2100-ம், 9 - 1 - 62 தொடக்கம் 20 - 2 - 63 வரைக்கும் ரூபா 1561-39 க்கு 8 வீத வட்டியும், அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் புணம் முற்ருக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 204-95 சதமும். இதில் ரூபா 250 27-2-63-ல் இறுபட்டுள்ளது.

காணி விபரம்:

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்கிறிக், தீவுப்பகுதி, காரதீவு கோயிற்பற்று, களபூமி இறை, 'பிட்டிவயலும் குடக்கம்போறையும்'' நெற்பரப்பு 9, எல்லை கிழக்கு அம்பலவாணர் பெண் சின்னக்குட்டியின் ஆதனம். வடக்கு கணபதிப்பிள்ளை பெண் அன்னமுத்துவுக்கும் பரமு நாகலிங்கத்துக்குமுரிய ஆதனங்கள். மேற்கு சின்னக்குட்டி கந்தையாவின் ஆதனம், தெற்கு கணபதிப்பிள்ளை பெண் இராசம்மாவின் ஆதனம் இதடங்கலும்.

செ. பாண்டித்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer
11/ஐ, மேல்மாடி,
... கட்டிடம்,
...
5-10-63,
M. 167 18-10-63.

---

## COMMISSION SALE
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக் கோட்டில்

இல. 6870.
கரவெட்டி கிழக்கு
வீரகத்தியார் பொன்னையா
—வழக்காளி.

எதிராக

(மரணம்) 1. கந்தர் சம்பந்தர்
2. பெண் சின்னம்மா
கரவெட்டி கிழக்கு.

ஷையூர் சம்பந்தர் கைம்பெண் சின்னம்மா இவர் காலஞ்சென்ற 1-ம் எதிரியின் இடத்துக்குப் பதில் எதிரி —எதிரி.

மேற்சொல்லிய இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனககுக் குறித்த கோட்டால் அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் 1963-ம்ஆ கார்த்திகை மாதம் 2-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடககம் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனங்களிடமாகவிருந்து என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி சட்டைவேலிக் கோயிற்பற்று.

1. கரவெட்டி வென்றிக் குறிச்சியிறை ''அழகுசீமா'' நிலப்பரப்பு 6. எல்லை கிழக்கும், வடககும், தெற்குப் ஒழுங்கை, மேற்கு கந்தர் வேலுப்பிளளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ் வெல்லைக்குட்பட்ட கல்வீடு கொட்டில், வீடுகள் நிந்தமாகவும் மிகுதி நிலம் பனைகள் இலந்தைகள் கிணறு அடங்கலிற் சொரியலாய் 3/16 பங்கும்.

2. ஷையிறை ''அழகுசீமா'' நிலப்பரப்பு $12\frac{3}{4}$. இதில் வடக்குப் புறமாக $\frac{1}{3}$ பங்கு நிலப்பரப்பு $4\frac{1}{4}$ பனைகளும். எல்லை கிழக்கு வல்லிபுரம் இளையதம்பியின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். வடக்கு ஒழுங்கையும் பொன்னையா பெண் தங்கமுத்துவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். மேற்கு கணபதிப் பிள்ளை பெண் இலட்சுமியின் உரிமைக்காரருக்கும் மறபேருக்குமுடையவாதனம். தெற்கு கந்தர் வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம் இதடங்கலிற் சொரியலாய் 3/16 பங்கும்

துரட்சித்தொகை ரூபா 988-50 இதில் ரூபா 650-க்கு 10-11-1960 தொடக்கம் 13-7-1962 வரையும் 10 வீத வட்டி ரூபா 108-33. அதன்பின் முழுத்தொகைக்கும் 5 வீத வட்டி ரூபா 62-61 கூடிய தொகை ரூபா 1159-44 செலவுவில்லுப்போட இருக்கிறது.

V M. KANDASAMY,
Commissioner of sales

வல்வெட்டித்துறை, 26-9-63.
M 166. 18-10-63.

---

### பிரிவிடுதல் நொத்தீஸ்

—0—

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்
கோட்டில்

வல்வெட்டித்துறை
சிவகுரு துரைசாமி —வழக்காளி.
இல. P / 748

எதிராக

மயிலிட்டி கரை
1. கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
2. கந்தையா குமாரசுவாமி
3. பெண் சோமேஸ்வரி
4. மூத்ததம்பி சந்திரசேகரம்
5. பெண் பூரணம்
6. சின்னையா கந்தசாமி
7. பெண் தங்கரட்டணம்
— எதிரிகள்.

மேற்படி எதிரிகளுக்கு மயிலிட்டி, மயிலிட்டி இறை அத்தியடி நில. பர. 28 3/8. இதில் நில. பர. 5 7/8 நீக்கி மிகுதி நில. பர. $22\frac{1}{2}$. என்னும் ஆதனம் அல்லது ஆதனங்களை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1963-ம்ஹூ கார்த்திகைமீ 21-ம்உ 10 மணிககுச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிருர்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி

ஒப்பம்:
G. A. V, பிள்ளைநாயகம்
பிரதம லிகிதர்/சக்கடுத்தார்,
1963-ம்ஹூ புரட்டாதிமீ 3-ம்உ
வே. பெ இராசரத்தினம்,
வழக்காளியின் தரணி,
M 163 11-10-63

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணர்பண்ணை கிழக்கு
1. செல்லப்பா சின்னத்துரையும் பெண்
2. சரஸ்வதியம்மாவும்
—வழக்காளிகள்,

இல. M B.3846

எதிராக

வண்ணர்பண்ணை மேற்கு
1. முத்துக்குமாரு பாலசிங்கம்
—எதிராளி.

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் M B. 3846-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை, 1963-ம்ஹூ கார்த்திகைமீ 23உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 21072-ம். 21 - 1 - 61 தொடக்கம் 30-1-62 வரைக்கும் ரூபாய் 17000-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 365-24 சதமும், கோட்டுச் செலவில் ரூபா 100 கொடுபட்டிருக்கிறது.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணர்பண்ணைக் கோயிற்பற்று வண்ணர்பண்ணை தென்மேற்கு இறை ''பிள்ளையான் வயலும், பிள்ளையான் குளத்து தலைமொட்டையும்'' பரப்பு நெல் இலா $26\frac{3}{8}$, ஆனல் பதிவு இல D 146/178-ம் பதிவு இலககம் D 226/17-ம் இலக்கப்படியும் பர நெல் இலா $28\frac{3}{8}$-ம். வீடுகளும், கிணறும் செய்பயிர் வான்பயிர்களும், எல்லை கிழக்கு மு. பாலசிங்கத்தின் (எதிராளியின்) ஆதனம். வடக்கு வண்ணர்பண்ணை மேற்கு வைத்தீஸ்வர சுவாமி கோவிலின் ஆதனம். மேற்கு வீரகத்தி வேலுப்பிள்ளையின் ஆதனம். தெற்கு குளம், தற்பொழுது மாநகரசபையினதும் மு. பாலசிங்கத்தின் (எதிராளியின்) ஆதனமும். இதடங்கலும் இக்காணியின் ஊடாக புன்னலை அல்லது மானிப்பாய் ருேட்டுக்குத் திறந்த புது ருேட்டு உட்பட, பொதுவாக இப்புது ருேட்டுக்கு செட்டித்தெரு என அழைப்பார்கள்.

அ. ஜெகநாதன்,
கொம்மிஷனர் &விலைமதிப்பாளர்.
16 A, அம்மன் ருேட்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
M 165 18-10-63,

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B, 3826
கந்தர் செல்லப்பா கைம்பெண்
சிவக்கொழுந்து, இணுவில்
—வழக்காளி.

எதிராக

பொன்னையா சிதம்பரப்பிள்ளை
இணுவில் —எதிரி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 3826-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணி 1963-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 8185-ம். 4 - 2 - 61 தொடக்கம் 29-5-61வரையில் ரூபா 7400-க்கு 7 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்ருக இறுபடும் வரையில் முழுத்தீர்வைத் தொகைக்கு 5 வீத வட்டியும், முத்திரைச் செலவு ரூபா 54/10-ம்

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணப் பகுதி வலிகாமம் வடக்கு உடுவில் கோவின்பற்று இணுவில் இறை. '' வட்டுவினியும் காட்டுப்புலமும்'' பரப்பு நில லாச்சம் $15\frac{3}{4}$-ம். கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் வான்பயிர் செய்பயிர்களும், இந்த நில பர. $15\frac{3}{4}$-க்கு எல்லை கிழக்கு கந்தர் செல்லப்பாவின் ஆதனமும் கிணறும் ஆறுமுகம் சின்னையாவினதும் செல்லப்பா சேனதிராசாவினதும் ஆதனங்கள், வடக்கு ஒழுங்கை. மேற்கு கந்தர் செல்லப்பாவினதும் சின்னையா பெண் சிதம்பரத்தினதும் காலஞ்சென்ற வயித்திலிங்கம் சரவணமுத்துவின் உரிமைக்காரரினதும் மறுபெயர்களுடைய ஆதனங்கள், தெற்கு பதஞ்சலி பெண் சிவபாக்கியத்தினதும் கந்தசுவாமி கோவிலின் தருமசாதன ஆதனமும். இந்த முழுக்காணியில் மேலே கூறப்பட்ட எல்லைகளின்படி சொரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளும்.

க. செல்வத்துரை,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
முருகன் இல்லம்,
இணுவில், 9-10-63.
M 162 18-10-63

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

கரையூர், யாழ்ப்பாணம்
1. சந்தியா வலதீஸரும் பெண்
2. விக்டோறியாவும்
—வழக்காளிகள்,

இல. M B. 4593

எதிராக

சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
தம்பிமுத்து ருசையா
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB. 4596-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1963ஹூ கார்த்திகைமீ 2-ம்உ (2-11-63)சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1416-ம், 3-2-62 தொடக்கம் 16-10-62 வரைக்கும் ரூபாய் 1000-த்துக்கு 12%வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5%வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் $167-32\frac{1}{2}$ சதமும்.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்று சுண்டிக்குளியிறை ''பணிக்கன் பெரிய வளவு'' பர நில இல 2 $13\frac{1}{2}$ குளி கல்வீடு, கிணறு மற்றும் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு கவரியஸ் அல்பிறட்டுக்கும் பங்காளருக்குமுரியவாதனம். வடக்கு செல்லன் பெண் நன்னிப்பிள்ளையி னுரிமையாளரினுதனம். மேற்கு சின்னத்தம்பி பெண் மார்க்ரட் சீனிகுட்டியினுதனம். தெற்குருேட்டு இதடங்கலும்,இவ் வெல்லைகளுக்குள் சேர்ந்தவையும்.

செ. விசாகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
133 பருத்தித்துறை ருேட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்
12-10-63.
M 164 18-10-63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபையின் தலைவராகப் பணியாற்றிய ...

1-ம் பக்கத் தொடர்ச்சி

தற்கே ஸ்ரீமான் இராமநாத வள்ளல் அக் கல்லூரியைத் தாபித்தார்.

அக்கல்லூரி தாபிதமான காலந் தொடக்கம் நமது நாட்டுக்கு அரிய பணி புரிந்து வருகின்றமையை யாவரும் அறிவர். கல்வியிற் சிறந்த ஆசிரியர்கள் என்றும் தொண்டாற்றி வருகின்றனர். அங்கு கல்வி பயிலும் மாணவிகளும் முறையாகக் கல்விகற்று நமது நாட்டுக்குப் பெருமை பயக்கக் கூடியவர்களாக விளங்குகின்றார்கள்.

இக்கல்லூரியின் பொன் விழா 18, 19 20-ந் திகதிகளில் நடைபெறவிருக்கின்றதென அறிந்து மகிழ்ச்சி யடைகின்றோம். ஸ்ரீமான் இராமநாத வள்ளல் அவர்களுடைய உள்ளக் கருத்தின்படி இக்கல்லூரி மேலும் மேலும் விருத்திபெற்று நமது நாட்டுக்குத் தொண்டு புரியும் நிலையைத் தரும்படி எல்லாம்வல்ல இறைவனை வழுத்துகின்றோம.

## நவராத்திரிவிழாக்கள்

### கற்பகவிநாயகராலத்தில்

வண்ணை. ஸ்ரீ கற்பகவிநாயகராலயத்தில் (சாந்தையர் மடம்) 18-10-63 இன்றுமுதல் ஐப்பசி 9 உ (26-10-63) சனிக்கிழமை வரை நவராத்திரி விழாவும், அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை காலை விஜயதசமி விசேட பூசையும் இரவு 7 மணியளவில் மானம்பு வைபவமும் நடைபெறும்.

x x x

### அம்பாள்ஆலயத்தில்

நாயன்மார்கட்டு ஸ்ரீ இராச இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி விழா வழமைபோலச் சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழகத்தினர் நவராத்திரி காலததில்தினமும் ஷை ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை வழிபாடு நடாத்த இருக்கிறார்கள்.

அணிந்துரை அரங்கம்

### தேவாரத் திரட்டு

சிவஸ்தல யாத்திரை செய்யும் அன்பர்களுக்கு உதவக்கூடியது.

வெளியிட்டவர்:
வ. க. செல்லப்பா
திருக்கேதீச்சரம்
மன்னார்.

சைவநெறி தழைத்துவழங்கும் இந்தியாவிலும் குறிப்பாக தென்னகத்திலும், ஈழநாட்டிலும் ஈசன் குடிகொண்டிருந்து அருள்புரியும் சைவத் திருக்கோயில்களுள் மிக்க அருட் தன்மை பொலியும் சிவஸ் தலங்கள் பல நூற்றுக் கணக்கானவை. அவற்றை யெல்லாம் சென்று தரிசிக்கும் ஆவற்பாட்டினை ஏற்படுத்தவும் அவ்வாவற்பாட்டினைச் செயல்படுத்துங்கால் அடியார்கள் அக்கோயில்களின் இனங் கண்டு கொள்வதற்கு உதவும்வகையிலும் அத்திருக்கோயில்களின் பெயர்களைக் கொண்ட பல தேவாரங்கள் தொகுக்கப்பட்டு நூலாக்கப்பட்டுள்ளன.

கெட்டித் தாளில் சிறந்த முறையில் அச்சேறியுள்ள இந்நூல் வெளியீடு நன்முயற்சியாகும்.

## மங்கையர் வாழ மாமறை வாழ.........

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

படியுறை மாந்தர் பகர்ந்திடப் பிறந்த
தூவமர் சீர்த்தி மூவர் மைந்தருள்
அந்தமில் சைவமுஞ் செந்தமிழ்ச் செல்வியு
மரனெறி வழக்கும் மனுநெறி யொழுக்கமும்
மன்னவன் கோலும் மன்னுயிர்க் காப்பும்
வாழவந் துதித்த சூளொளிச் சுடரே!
ஒருகடல் குடித்த குறுமுனி நாணத்
துங்க மிகுததிடு மங்கிளஞ் செந்தமிழ்
இசையுறு மிருகடல் பசையறப் பருகிச்
சுருங்காக் கேள்வியர் நெருங்கிய மன்றெனுந்
திண்கிரி யேறி நண்பிலர் நடுங்க
வொலிபட விடித்து நகைமின் காட்டி
வடுவறு சிறப்பின் நடுநிலை தழையவுந்
தாவிலா நீதி பூவுல கடையவும
பலபல விரிவுரை சலசல பொழியும்
ஐமயில் வான்புகழ்த் துய்யபொன் முகிலே!
ஆதியில் பரம னருள்புரி நான்கு
வேத முடிவு மாகமத் துச்சியு
மாமிரு பாற்கடல் தோமறக் கடைந்து
மோனம தருளும் ஞானவா ரமுதெடுத்
தெவ்வுல கத்துஞ் செவ்விதிற் பரப்பி
மன்னுயிர் பலநோய் வெந்திட வளித்த
ஆசிகல் அனுபவ தேசிக மூர்த்தி!
முற்றுலகாளு முடிமன ரளித்த
வெற்றிசேர் பட்டம் மிகப்பல பெற்றோய்
பாவலர் நாவினும் பைந்தமிழ்ப் பாவினுங்
காவல ருளத்தினுங் கருதுநர் செவியினும்
கண்டென வினித்துக் கருதலர் தமக்குக்
கடுவென வுறைக்கு மடுதிற லிராம
நாதனென் றோதபி தானமொன் றுடையோய்
நந்தா விளக்கே சிந்தா மணியே
கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியே
நையுநர்க் கருளு மைவகைத் தருவே
கைதவங் கடிந்த செய்தவக் கொழுந்தே
அலையிடைப் பிறவா வாசுசற் றடையா
விலைமதிப் பறியா மேதகு முத்தே
நின்றிருச் செவியிடைத் துன்னிய விடுக்கும்
மாற்றமொன் றுளது கேட்டினி நருண்மோ
பண்டைக் காலத் தொண்டொடி மார்கள்
சீர்தரு கல்வியிற் றிருந்திய வொழுக்கிற்
கடவுட் பத்தியிற் கதித்தன ரிருந்து
மைந்தரை நன்னெறித் தந்தன ரதுபோய்க்
காலமும் முரணிக் கன்னியர் கல்வியுஞ்
சீலமுமின்றிச் சிதைவுறு மின்னாள்
பரமதப் படுகுழி யிடையவர் விழுந்து
இம்மையு மறுமையு மிரண்டு மிலலாது
கெடவது நீக்கிப் படிபுக ழிராம
நாதன் கல்லூரியென் றோதிடு கழகந்
தெய்வக் கமமியன் சிந்தையுந் நடுங்க
நன்கு தாபித் தெங்களுக் கருளினை

அதனால்

மங்கையர் வாழ்ந்தனர் மாமறை வாழ்ந்தது
சங்கைகொள் சைவ சமயமும வாழந்தது
செந்தமிழ்ச் செல்வியுஞ் சிறந்து வாழ்ந்தனளால்
கைம்மா றில்லாக் கருணைமற் றிதற்கு
எம்மா றடியே மியற்றுமா றறியேம்
மாவிரு ஞாலம் மறுவின்றி விளக்கு
மாயிரங் கிரணத் தலரியுள்ளளவும்
நின்பெருங் குலமு நீயுநின் றுணையு
மின்பிசை யிருநிதி யாவையும் பொலிந்து
ஆலிற் றழைத்து அறுகின்வே ரோடி
மூங்கிலிற் கிளைத்து முடியா தென்றும்
ஊழி யூழி யோங்கி
வாழிய வென்று வாழ்த்துவம் மகிழ்ந்தே

## தமிழர் குலம் தழைக்க!

[இணுவையூர் வித்துவான் இ. திருநாவுக்கரசு]

சீர்வளரும் ஈழநகர் சிறப்ப வந்தோன்
செந்தமிழி லிலக்கணநூல் செய்து யர்ந்தோன்
பார்வளரும் புகழ்பரவச் சீமைநண்ணிப்
பரவுபுக ழரசசபை பணிய நீதி
ஏர்வளர எடுத்துரைத்த அரச ரேறு
எங்கள் தமிழ்த் தலைமகனார் இராமநாதன்
வார் புகழான் தாபித்தே யைம்பதாண்டு
வளர்ந்தபல் கலைக்கழகம் வாழி யூழி. 1.

திருமருவு யாழ்நகரம் சிறப்ப வந்த
சீரிருகண் மணியனைய தலைமை சேர்சீர்
மருவளரும் சித்தாந்த சரபம் கல்வி
வளநிறைபே ரறிஞனுயர் அரச நீதிப்
பெருமகனார் மேல்சபைசேர் நடேச பிள்ளை
பேணிவளர்த் திடுகலைதேர் கழக மோங்கி
இருநிலத்துப் பல்கலைகள் நிலவ வோங்கி
யென்றென்றும் கலைநியம மெனவேவாழி. 2.

மானமிகு தமிழர்குலம் தழைக்க வென்றும்
மன்னுசிவ சைவநெறி நிலைக்க வென்றும்
ஈனமிலா இன்தமிழ்சீர் சிறக்கவென்றும்
எங்கள்தமிழ் மாணவர்மே லுயர வென்றும்
மோனதவன் ஞானிஉயர் கல்வி மேதை
முந்துதலை மகன்இராம நாதன் தந்த
ஞானகலைக் கழகநிறைந் தைம்ப தாண்டு
நனிபுகழோ டினிதோங்கி வாழி ஊழி. 3.

இவ்வாரம் 20-10-63 — 26-10-63

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உடல்நிலை, குடும்ப நிலை நிறைவின்மை, அலுவலகத்தில் சச்சரவு, தந்தைவழி உறவினரின் சண்டைத்தொல்லை என்பன ஏற்படும். முதல் நாளை எச்சரிக்கையோடு கழிக்குக.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

இரகசிய எதிரிகள்பற்றி எச்சரிக்கை. உம்மை வெல்ல முடியாது. ஆனல் அதிக தொல்லை தருவர், பணமளவில் நல்ல வாரம். இனத்தவர் மூலமான தொல்லை உண்டாம். செவ்வாய் இரவு புதன், வியாழன் எச்சரிக்கையோடு கழிய வேண்டும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்.

எல்லாத்தடைகளையும் தாண்ட முடியும். நிலபுலங்களால் இலாபம் உண்டாம். மன நிம்மதி இருக்காது. கடைசி இருநாட்களையும் எச்சரிக்கையோடு கழிக்குக.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

இடரிலிருந்து நண்பர் மீட்பர். பண இலாபம் நிச்சயம். உடல் நிலை, குடும்ப நிலை குழப்பமாக இருக்கும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

புது முயற்சிகளுக்கு ஏற்ற வாரம், ஆரம்பத தோல்வி கண்டு துவண்டுவிட வேண்டாம். வேலை அதிகமாகும். விவசாயத்தால் இலாபம் நிச்சயம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2 பாதம்.

சில தவறான நம்பிக்கைகளை இவவாரம் நீக்கிக் கொள்வீா.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்'

சண்டைகளுக்கு முந்துவீர், இனத்தவருடன் சண்டையும், எண்ணியவண்ணம் நடந்துகொள்ளமுடியாமையும் உண்டாம்.

**விருட்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

உடல்நிலைக்கோளாறு, முன்கோபம், நிலபுலங்களால் இலாபம் என்பன ஏற்படும். இடரிலிருந்து நண்பர் மீட்பர்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

உடல்நிலைக் கோளாறு புது முயற்சிகள் சுணங்கி நிறைவேறல். பழைய முதலீடுகள் நல்ல பலனைத்தருதல் உண்டாம். குடும்பநிலைகுழப்பலாகஇருக்கும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

வேண்டாத கண்டனங்களுக்காளாவீர். புது முயற்சிகள் தடைப்படும். நண்பர்கள் மிக உதவுவர், விவசாய இலாபம் நிச்சயம்,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு. தந்தைவழி உறவினர் மூலமான தொல்லைகளுக்கு இடமுண்டு, தொழிலளவில் எல்லாம் குறைவின்றி நடைபெறும், பண இலாபம் நிச்சயம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

புது முயற்சிகளுக்கு ஏற்ற வாரம், ஆரம்பத்தில எதிர்ப்பிருக்கும் அதைத்தாண்டிவிடுவீர். உடல்நிலை ஊறுபடும்,

தொழில் வெற்றியும் புகழும் நிச்சயம். உடல்நிலை திருந்தும்.

## இராமநாதன் கல்லூரியில் காந்தி கூறியது

பணம், புகழ், அழகு இவற்றைத் தேடியலையாமல் நல்லொழுக்கத்திற்கு உறுதுணையான ஒப்பற்ற குணங்கள் படைத்த ஒருவனையே நீங்கள் தேட வேண்டும்; பார்வதியம்மை அப்படித்தான் செய்தாள். பார்வதிக்குச் சிவனைப் பற்றி நாரதர் எப்படி வருணித்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள். 'உடல் முழுவதும நீறணிந்த ஆண்டி, அழகில்லாதவன், பிரமசாரி' என்று சொன்னார். 'ஓ அப்படியா! அவர்தான் என் கணவர்' என்றாள் பார்வதி. பார்வதி தவமிருந்தது போல் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உங்களால் தவமிருக்க முடியாதுதான். பார்வதியைப்போல் நீங்கள் தவமியற்றாவிட்டால் சிவனைப்போல் அநேக ஆடவர்களைத் தோற்றுவிப்பது இயலாத காரியம். மனவலிமையற்ற மனிதர்களாகிய நாம் பார்வதி தேவியைப் போல் நீண்டகாலம் தவமிருக்க முடியாதுபோகிலும் ஆயுள்பரியந்தமாவது தவம் இருக்ககூடும்.

இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால், பொம்மைக் கொலுவிலே ஒளித்துக் கொள்வதற்கு நீங்கள் மறுத்துவிடுவீர்கள். சாவித்திரி, சீதை, தமயந்தி, பார்வதியைப்போல் நீங்கள் சதிமார் என்ற இலட்சியத்தை அடைவீர்கள். அப்பொழுதுதான் அந்த இலட்சியத்தை அடையும்போதுதான், இந்தக்கல்லூரியில் படித்ததன தகுதி உங்களுக்குக் கிட்டும் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

## அருணந்திசிவாசாரியார் குருபூசை

அருணசல வித்தியாசாலையில் ஆசிரியர்களாலும், மாணவர்களாலும், ஸ்ரீ. அருணந்தி சிவாசாரியார் குருபூசை 14-10-63ல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் ... இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 18-10-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org